**வல்வெட்டித்துறைநகர சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 27 பெப்ரவரி 2020 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 15 யூலை 2020 திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஆகஸ்ட் 2020 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வல்வெட்டித்துறை நகரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது 03 மூலதன வேலைகள் ஆரம்பிக்கப்படாத போதும் அதற்கான ஒதுக்கீட்டு பெறுமதி ரூபா 675,000 இனை சில்லறைக்கடன் கொடுத்தோர் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தமையினால் பொறுப்புக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் கூட்டி காட்டப்பட்டிருந்ததுடன் திரண்ட நிதியும் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | தவிர்க்க முடியாத காரணங்களினால் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை | மூலதன வேலைகள் ஆரம்பிக்கப்படாது சில்லறைக்கடன் கொடுத்தோர் கணக்கிற்குள் உள்ளடக்கப்பட்ட பெறுமதியினை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நகரசபை கட்டளைச்சட்டம் VI ஆம் பாகம் 157 ஆம் பிரிவு | | | |
| | 6 (எ) இலக்கம் | ரூபா 53,150 ஆன அனுமதியற்ற விளம்பரங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | சட்டத்திற்கமைய உரிய காலத்தினுள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | நகரசபை ஒழுங்கு விதி | | | |
| | அத்தியாயம் (III) பிரிவு 54(3) | ஆதனவரி நிலுவை ரூபா 5,736,117 செலுத்தத் தவறியோருக்கு பற்றாணைச் சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஆதன வரி நிலுவைகள் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | நகரசபை ஒழுங்கு விதிக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | இலக்கம் 371 | சபையினால் வழங்கப்பட்ட முற்பணம் ரூபா 85,000 தீர்வு செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளபட்டிருக்கவில்லை | உரிய அனுமதி கிடைத்ததும் சீர்செய்யப்படும். | நிதி ஒழுங்கு விதிக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,625,211 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,733,352 தொகையாக இருந்தது. எனவே முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,891,859 ஆக அதிகரித்துள்ளது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 4,737,379 | 5,185,295 | 5,736,117 | 2,406,500 | 1,727,713 | 4,538,640 |
| வாடகைகள் | 3,652,100 | 4,432,052 | - | 2,873,850 | 3,700,781 | 47,000 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 729,100 | 745,250 | - | 734,500 | 716,355 | - |
| ஏனைய வருமானம் | 66,859,690 | 55,351,110 | 5,196,616 | 50,362,500 | 47,264,939 | 11,617,089 |
| | 75,978,269 | 65,713,707 | 10,932,733 | 56,377,350 | 53,765,238 | 16,202,729 |

#### 2.2.2 வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆதனவரி நிலுவை ரூபா 5,210,372 இனை அறவிட சபையினால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. | உரியகாலத்தினுள் நிலுவையினை அறவிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

2.2.3 **அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

**தொழில்சார் அனுமதிப்பத்திரங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தோலைத்தொடர்பு கோபுரங்களின் உரிமங்களும் நிர்மாணித்தல் கட்டணங்களும் ரூபா 10,000 சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | உரியகாலத்தினுள் நிலுவைகளினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

2.2.4 **முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 278,836 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரியகாலப் பகுதியினுள் நிலுவையினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபை கட்டளைச் சட்டம் 4 பிரிவின் பிரகாரம் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபை கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் பிரகாரம், 15 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் 05 விடயங்களுக்கு மட்டுமே உப விதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | உப விதிகளை தயாரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நகர சபை கட்டளைச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான வைப்புக்கள் ரூபா 62,220,310 நகர அபிவிருத்தி நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது வட்டி வருமானத்தை உழைக்கும் நோக்கில் வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்தன. | திண்மக் கழிவு செயற்பாட்டிற்கு காணி கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | வைப்பு தொகைகளை அபிவிருத்தி தேவைக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 05 மயானக்காணிகளின் பெறுமதி நிதிக்கூற்றுகளில் காட்டுவதற்கும் அதற்கான வரி அறவிடுவதற்கும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . | நகர சபைக்கு சட்ட ரீதியாக பராதீனப்படுத்தப்பட்டதும் வரி அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | மயானங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 10 மனித வளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய காலத்தில் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தீருவில் பூங்கா புனரமைப்பிற்கான கொடுப்பனவு ரூபா 214,605 இனை தீர்ப்பனவு செய்ய இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இதுவரை குறித்த தொகை விடுவிக்கப்படவில்லை. | தீர்பனவினை உரியகாலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | உரிய அதிகாரிகளின் அனுமதிப்பத்திரம் பெறப்படாது விலங்குப்பண்ணை நடாத்துதல் தொடர்பாக 2017 இல் இருந்து வழக்கு இடம்பெற்று வருவது அவதானிக்கப்பட்டிருந்த போதும் இதற்கான செலவுகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தபட்டிருக்கவில்லை | நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருக்கவில்லை. | சபைக்கு எதிரான வழக்குகள் தொடர்பாக நிகழத்தக்க பொறுப்புக்கள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபைக்கு எதிராக காணி தொடர்பாக 2002 ஆம் ஆண்டிலிருந்து 02 வழக்குகள் இடம்பெற்று வருகின்ற போதும் இதற்கான செலவுகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தபட்டிருக்கவில்லை | ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவினங்கள் குறித்த தலைப்புக்களுக்கு தாக்கல் செய்யப்படுவதனால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதில்லை . | வழக்குகள் தொடர்பாக நிகழத்தக்க பொறுப்புக்கள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வாகனம் ஒன்று சபையின் பெயருக்கு உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | வாகனத்தை மீளக்கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உரிய காலத்தினுள் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 6,660,000 ஆன காணி கட்டடத்திற்கான உரிமையினை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய ஆவணங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய காலத்தினுள் உரிமையினை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5.2 விளைவற்ற சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பொதுப்பூங்காவை அமைப்பதற்காக 2013 இல் குத்தகைக்கு பெறப்பட்ட காணியில் பூங்கா அமைக்கப்படாததுடன் குத்தகை கட்டணமாக ரூபா 298,800 செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்பார்த்த நிதி கிடைக்கப்பெறாமையினால் பூங்கா அமைக்கும் செயற்றிட்டம் தாமதமாகியது. | ஒரு செயற்றிட்டத்தை திட்டமிடும் போது அதற்குரிய நிதிமூலங்களை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | புதிய சந்தைக்கட்டிட தொகுதியில் 11 கடைகளும் திறந்த மண்டபமும் வாடகைக்கு வழங்கப்பட்டிருக்காமையினால் நகரசபைக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. | வேறு பயன்பாட்டிற்காக மாற்றியமைப்பதற்கு திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு வருகிறது. | சபையினால் நிர்மானிக்கப்பட்ட கடைத்தொகுதியினை பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | நீண்ட காலத்திற்கு பயன்படுத்தாது காணப்படுகின்ற 01 உழவு இயந்திரமும் உழவு இயந்திர பெளசரும் திருத்துவதற்கோ விற்பனை செய்வதற்கோ சபையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பயன்படுத்தப்படாத வாகனங்கள் தொடர்பாக உரிய காலத்தினுள் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் பாதீட்டின் செலவுகளுக்கும் உண்மையான செலவுகளுக்கும் கணிசத்தன்மையான வேறுபாடு காணப்படுவதனால் இது ஒரு வினைத்திறனற்ற பாதீடாக காணப்பட்டுகிறது. | பதில் தரப்படவில்லை. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 4.2 தீர்க்கப்படாத அவதானிப்புக்கள் மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மாகாணப் பொதுக் கணக்குக்குழுவினால் விசாரணை செய்யப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் 2012, 2013 ஆகிய வருடங்களிற்கான கணக்காய்வு அறிக்கை தொடர்பான அவதானிப்புக்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு காலத்திற்கு காலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. | ஐயவினாக்கள்/ மாகாண கணக்கு குழுக்களின் அறிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |